மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *53*, திரு. ப. அண்ணாவி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

53—

புதிய பேருந்துகள்.

***15219—திரு. ப. அண்ணாவி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், தொட்டியம் தொகுதியிலுள்ள காட்டுப்புத்தூர் மற்றும் மேட்டுப்பாளையத்திலிருந்து சென்னைக்கு புதிய பேருந்துகள் இயக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் திருச்சி மாவட்டம், தொட்டியம் தொகுதியிலுள்ள காட்டுப்புத்தூர் மற்றும் மேட்டுப்பாளையத்திலிருந்து சென்னைக்கு பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. அண்ணாவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வணக்கம். எனது தொட்டியம் தொகுதியில் வாழை, வெற்றிலை அதிகமாக சாகுபடி செய்வதால் வியாபாரிகளும், பொதுமக்களும் தினந்தோறும் சென்னை செல்லவேண்டி இருப்பதால் எனது தொட்டியம் தொகுதிக்கு உட்பட்ட காட்டுப்புத்தூர் பேரூராட்சியிலிருந்தும், தாத்தையங்கார்பேட்டை ஒன்றியத்திலுள்ள மேட்டுப்பாளையம் பேரூராட்சியிலிருந்தும் தொட்டியம் தொகுதியைச் சார்ந்த வியாபாரிகளும், பொதுமக்களும் சென்னைக்கு சென்றுவர, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மறுபரிசீலனை செய்து எனது தொகுதியில் இயக்கப்படும் தமிழக அரசுப் பேருந்தை காட்டுப்புத்தூர் வரை நீட்டித்தும்,

2003 மார்ச் 24]

தாத்தையங்கார்பேட்டையிலிருந்து இயக்கப்படும் தமிழக அரசு பேருந்தை மேட்டுப்பாளையம் வரை நீட்டித்தும் தர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அண்ணா தொழிற்சங்க பேரவையினுடைய மாவட்டச் செயலாளராகவும் இருக்கிறார். அவருக்கு இப்போது அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் சார்பாக அந்தப் பகுதியிலிருந்து சென்னைக்கு நேரிடையாக புதிய பேருந்துகள் விடுவதிலே உள்ள இடர்பாடுகள் முழுமையாகத் தெரியும். இருந்தாலுங்கூட புதிய பேருந்துகள் இயக்குவதற்கு வாய்ப்பு இல்லை என்றபோதிலுங்கூட, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, ஏற்கெனவே அங்கு முசிறி பகுதியிலிருந்து சென்னைக்கு வந்துகொண்டிருக்கின்ற அந்த திருச்சி அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான பேருந்தை, காட்டுப்புத்தூரிலிருந்து புறப்படுகின்ற வகையிலே அந்தப் பேருந்து வழித்தடத்தை நீட்டிப்பது குறித்து அரசு பரிவுடன் பரிசிலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 54, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

54—

மின் விளக்கு.

***7627—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், அரியலூர் ஊராட்சி, சித்தாலத்தூர் வடக்குத் தெருவிற்கு புதிய மின் கம்பமும், மின் விளக்கும் அமைக்கும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?